**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.382/2022 P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சிவக்குமார் | த–பெ | மகாலிங்கம் |
| ஊர்: | : | ஒக்கூர் | | |
| வயது: | : | 52/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | மூப்பு குடிமையியல் மருத்துவர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.12.2025**

**எதிரிகள் ஆஜர் இல்லை. அரசு தரப்பில் மனு செய்ததன் அடிப்படையில் நீதிமன்ற அனுமதியுடன் சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் காணொலி வாயிலாக ஆஜர்.**

---

முதல் விசாரணை.

நான் தற்சமயம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் மூப்பு குடிமையியல் மருத்துவராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு காரைக்குடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணி செய்து வந்த போது 29.09.2014 அன்று காலை 11.00 மணியளவில் தேவக்கோட்டை தாலுகா, சோனார் கோட்டை என்ற ஊரை சேர்ந்த 55 வயது மதிக்கத்தக்க முத்து என்பவரை அவருடைய மகன் அழகர்சாமி என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை இனம் தெரிந்த நபர் அன்றைய தினமே காலை 7.00 மணிக்கு கட்டையால் தன்னை அடித்ததாக கூறினார். அவருக்கு நான் சோதித்து பார்த்ததில் அவருக்கு தலையில் 5 செ.மீ நீளமுள்ள தையல் போடப்பட்ட சிதைந்த காயம் காணப்பட்டது. மற்றொறு காயமானது V வடிவத்தில் இடது பக்க முன் தலையில் தையல் போட்ட நிலையில் இருந்தது. அவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த பிறகு மூளை பகுதிக்கு CT ஸ்கேன் எடுக்க நான் பரிந்துரை செய்தேன். சிவகங்கை அரசு மருத்துவமனையில் அன்றைய தினமே அவர் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். 06.10.2014 அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிப்பு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மோகனா என்பவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரன வகையை சேர்ந்தது என்று சான்று அளித்துள்ளார். அதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயமானது சாதாரன காயம் என்று இறுதி கருத்துரை வழங்கினேன். **விபத்து பதிவேடுடன் கூடிய இறுதி கருத்துவரை அ.சா.ஆ.3**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை .**

புகார்தாருக்கு ஏற்பட்ட காயம் கரடுமுறடான பள்ளத்தில் விழுந்தாலோ அல்லது வாகனத்தில் தடுமாறி விழுந்து அடிபட்டாலோ மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உண்டு.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.12.08 17:34:55 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.